**2. $X = \{3, 4, 6, 8\}$. என்க. $\mathbb{R} = \{(x, f(x)) | x \in X, f(x) = x^2 + 1\}$ என்ற உறவானது $X$ -லிருந்து $\mathbb{N}$ - க்கு ஒரு சார்பாகுமா?**

கொடுக்கப்பட்டது, $X = \{3,4,6,8\}$

$Y = \{1,2,3,4, \ldots.\}$

$R = \{(x, f(x)/x \in X, f(x) = x^2 + 1)\}$

$y = f(x) = x^2 + 1$

$f(3) = 3^2 + 1 = 10$

$f(4) = 4^2 + 1 = 17$

$f(6) = 6^2 + 1 = 37$

$f(8) = 8^2 + 1 = 65$

$R = \{(3,10), (4,17), (6,37), (8,65)\}$

மதிப்பகம் $X$ ல் உள்ள ஒவ்வொரு உறுப்புக்கும் $N$ ல் ஒரு நிழல் உரு உள்ளது.

**ஆம்,** $R$ ஆனது $X$ லிருந்து $N$ க்கு ஒரு சார்பாகும்.

> **உங்கள் பயிற்சிக்காக....**
> 2. $A = \{0,1,2,3\}$ மற்றும் $B = \{1,3,5,7,9\}$ எனில் $A$ லிருந்து $B$ க்கு $R = \{(x, f(x)/x \in A, f(x) = 2x + 1\}$ என்ற தொடர்பை வரையறுக்க
>
> **விடை:** $A$ ல் உள்ள ஒவ்வொரு உறுப்பும் $B$ ல் உள்ள ஒவ்வொரு உறுப்புடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. $A$ லிருந்து $B$ ஆனது சார்பாகும்

**3. கொடுக்கப்பட்ட சார்பு $f: x \to x^2 - 5x + 6$, எனில்,**

**(i) $f(-1)$ (ii) $f(2a)$ (iii) $f(2)$ (iv) $f(x-1)$**

$f(x) = x^2 - 5x + 6$

(i) $f(-1)$

$f(-1) = (-1)^2 - 5(-1) + 6$

$= 1 + 5 + 6 = \mathbf{12}$

(ii) $f(2a)$

$f(2a) = (2a)^2 - 5(2a) + 6$

$= \mathbf{4a^2 - 10a + 6}$

(iii) $f(2)$

$f(2) = 2^2 - 5(2) + 6 = 4 - 10 + 6 = 0$

(iv) $f(x-1)$

$f(x-1) = (x-1)^2 - 5(x-1) + 6$

$= x^2 - 2x + 1 - 5x + 5 + 6$

$= \mathbf{x^2 - 7x + 12}$

> **உங்கள் பயிற்சிக்காக....**
> 3. $f(x) = x^2 + 2x + 1$ எனில் பின்வருவனவற்கை காண்க
> i) $f(1)$ ii) $f(-3)$ iii) $f(2a)$ iv) $f(x+1)$
>
> **விடை:**
> i) $f(1) = 4$ ii) $f(-3) = 4$
> iii) $f(2a) = 4a^2 + 4a + 1$ iv) $f(x+1) = x^2 + 4x + 4$




**4. படத்தில் கொடுக்கப்பட்ட வரைபடம் $f(x)$ – ன் மூலமாக, $f(9) = 2$ என்பது தெளிவாகிறது.**

**(i) பின்வரும் சார்புகளின் மதிப்புகளைக் காண்க**

**(அ) $f(0)$ (ஆ) $f(7)$ (இ) $f(2)$ (ஈ) $f(10)$**

**(ii) $x$ – ன் எம்மதிப்பிற்கு $f(x) = 1$ ஆக இருக்கும்?**

**(iii) $f(x)$ - ன் (1) மதிப்பகம் (2) வீச்சகம் காண்க.**

**(iv) $f$ என்ற சார்பில் 6 -ன் நிழல் உரு என்ன?**

(i) படத்திலிருந்து, (அ) $f(0) = \mathbf{9}$ (ஆ) $f(7) = \mathbf{6}$ (இ) $f(2) = \mathbf{6}$ (ஈ) $f(10) = \mathbf{0}$

(ii) $f(x) = 1 \Rightarrow x = \mathbf{9.5}$

(iii) (1) $f$ ன் மதிப்பகம் $= \{\mathbf{0, 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10}\}$ அல்லது

$\boldsymbol{f = \{x/0 \le x \le 10, x \in R\}}$

(2) $f$ ன் வீச்சகம் $= \{\mathbf{0, 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9}\}$ அல்லது

$\boldsymbol{f = \{x/0 \le x \le 9, x \in R\}}$

(iv) $f$ என்ற சார்பில் 6 -ன் நிழல் உரு $= \mathbf{5}$



**5.** $f(x) = 2x + 5$ **என்க.** $x \neq 0$ **எனில்** $\frac{f(x+2)-f(2)}{x}$ **ஐக் காண்க.**

கொடுக்கப்பட்டது: $f(x) = 2x + 5, x \neq 0$

$$f(x+2) = 2(x+2) + 5$$
$$= 2x + 4 + 5$$
$$= 2x + 9$$

$$f(2) = 2(2) + 5$$
$$= 4 + 5$$
$$= 9$$

எனவே, $\frac{f(x+2)-f(2)}{x} = \frac{2x+9-9}{x} = \frac{2x}{x} = \mathbf{2}$

**உங்கள் பயிற்சிக்காக....**

4. $f(x) = 2x - 1, \{2 \leq x \leq 4, \quad x \in R\}$ எனில் $\frac{f(2)+f(4)}{f(3)}$ ஐக் காண்க. விடை: 2

**6.** **ஒரு சார்பு** $f$ **ஆனது** $f(x) = 2x - 3$ **என வரையறுக்கப்பட்டால்**

**(i)** $\frac{f(0)+f(1)}{2}$ **- ஐக் காண்க. (ii)** $f(x) = 0$ **எனும்பொழுது,** $x$ **ஐக் காண்க.**

**(iii)** $f(x) = x$ **எனில்** $x$ **ஐக் காண்க. (iv)** $f(x) = f(1-x)$ **எனில்** $x$ **ஐக் காண்க.**

(i) $\frac{f(0)+f(1)}{2}$

$$f(0) = 2(0) - 3 = -3$$
$$f(1) = 2(1) - 3 = -1$$
$$\frac{f(0)+f(1)}{2} = \frac{-3-1}{2} = -\frac{4}{2} = \mathbf{-2}$$

(ii) $f(x) = 0$

$$2x - 3 = 0$$
$$2x = 3$$
$$x = \mathbf{\frac{3}{2}}$$

(iii) $f(x) = x$

$$2x - 3 = x$$
$$2x - x = 3$$
$$x = \mathbf{3}$$

(iv) $f(x) = f(1-x)$

$$2x - 3 = 2(1-x) - 3 = 2 - 2x - 3 = -2x - 1$$
$$2x + 2x = 3 - 1$$
$$4x = 2$$
$$x = \mathbf{\frac{1}{2}}$$

**7.** **24 செ.மீ பக்க அளவுள்ள சதுர வடிவத் துண்டிலிருந்து நான்கு மூலைகளிலும் சம அளவுள்ள சதுரங்களை வெட்டி படத்தில் உள்ளவாறு மேல்புறம் திறந்த ஒரு பெட்டி செய்யப்படுகிறது. இந்த பெட்டியின் கன அளவு** $V$ **எனில்,** $V$ **ஐ** $x-$ **யின் சார்பாகக் குறிப்பிடுக.**




சதுர வடிவ துண்டின் பக்க அளவு $= 24$ செ.மீ

மூலைகளில் வெட்டப்படும் பகுதியின் பக்க அளவு $= x$ செ.மீ

மேல்புறம் திறந்த பெட்டியின் பக்க அளவு $= 24 - 2x$ செ.மீ

உயரம் $= x$ செ.மீ

மேல்புறம் திறந்த பெட்டியின் கன அளவு $V = lbh$ கன அலகுகள்.

$$= (24-2x)(24-2x)(x)$$
$$= (24-2x)^2(x)$$
$$= (576 - 96x + 4x^2)x$$
$$= \mathbf{4x^3 - 96x^2 + 576x}$$

**8.** $f$ என்ற சார்பு $f(x) = 3 - 2x$ என வரையறுக்கப்படுகிறது. $f(x^2) = (f(x))^2$ எனில் $x$ -ஐக் காண்க

கொடுக்கப்பட்டது: $f(x) = 3 - 2x$

காண வேண்டியது $x$, $f(x^2) = (f(x))^2$

$$3 - 2x^2 = (3 - 2x)^2$$
$$3 - 2x^2 = 9 - 12x + 4x^2$$
$$4x^2 + 2x^2 - 12x + 6 = 0$$
$$6x^2 - 12x + 6 = 0$$
$$x^2 - 2x + 1 = 0$$
$$(x-1)^2 = 0$$
$$x - 1 = 0$$
$$\boldsymbol{x = 1}$$

**9.** ஒரு விமானம் 500 கி.மீ/மணி வேகத்தில் பறக்கிறது. விமானம் 'd' தொலைவு செல்வதற்கு ஆகும் காலத்தை t(மணியில்)ன் சார்பாக வெளிப்படுத்துக.

கொடுக்கப்பட்டது :

வேகம்($S$)= 500 கி.மீ/மணி

வேகம் $= \frac{\text{தூரம்}}{\text{நேரம்}}$

$S = \frac{d}{t}$, $\boldsymbol{d = 500t}$

**உங்கள் பயிற்சிக்காக....**

5. ஒரு பேருந்து மணிக்கு 50கி.மீ வேகத்தில் செல்கிறது. இதை தூரம் $d$, மணி t ல் சார்பாக எழுதுக.

**விடை:** $d = 50\,t$

**10.** அருகில் உள்ள அட்டவணையில் பெண்களின் முன்னங்கைகளின் நீளம் மற்றும் அதனுடன் தொடர்புடைய உயரங்களின் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்த விவரங்களின் அடிப்படையில் ஒரு மாணவர், உயரம் ($y$) மற்றும் முன்னங்கை நீளம் ($x$) –க்கான உறவை $y = ax + b$ எனக் கண்டுபிடித்தார். இங்கு $a$ மற்றும் $b$ ஆகியவை மாறிலிகள்.

| முன்னங்கைகளின் நீளம் (செ.மீ) '$x$' | உயரம் (அங்குலம்) '$y$' |
|---|---|
| 35 | 56 |
| 45 | 65 |
| 50 | 69.5 |
| 55 | 74 |

(i) இந்த உறவானது சார்பாகுமா என ஆராய்க.

(ii) $a$ மற்றும் $b$ –ஐக் காண்க. PTA-4

(iii) முன்னங்கையின் நீளம் 40 செ.மீ எனில், அந்த பெண்ணின் உயரத்தைக் காண்க.

(iv) உயரம் 53.3 அங்குலம் எனில் அந்தப் பெண்ணின், முன்னங்கையின் நீளத்தைக் காண்க.

கொடுக்கப்பட்டது $y = ax + b$

(i) அம்புக்குறிப்படம்




$x$ ல் உள்ள ஒவ்வொரு உறுப்பும் $y$ ல் ஒரே ஒரு நிழல் உரு கொண்டுள்ளது.

**ஆம்,** எனவே இந்த உறவு சார்பாகும்.

(ii) $a$ மற்றும் $b$ –ஐக் காண

அட்டவணையிலிருந்து

$35a + b = 56$ ...............(1)

$45a + b = 65$ ..............(2)

(−) (−) (−) (−)

$-10a = -9$

$$a = \frac{9}{10} = 0.9$$

$a = 0.9$ என (1) ல் பிரதியிட

$$35(0.9) + b = 56$$
$$31.5 + b = 56$$
$$b = 56 - 31.5 = 24.5$$

$\boldsymbol{a = 0.9}$ மற்றும் $\boldsymbol{b = 24.5}$

(iii) நீளம் = 40செ.மீ, $a = 0.9, b = 24.5$

$$y = ax + b$$
$$= (0.9)(40) + 24.5$$
$$= 60.5$$

முன்னங்கையின் நீளம் 40 செ.மீ எனில், அந்த பெண்ணின் உயரம் **= 60.5 அங்குலம்**

(iv) உயரம் = 53.3 அங்குலம்

$$y = ax + b$$
$$53.3 = (0.9)x + 24.5 \quad = 0.9x + 24.5$$
$$0.9x = 53.3 - 24.5 = 28.8$$
$$x = \frac{28.8}{0.9}$$

$\boldsymbol{x = 32}$ **செ.மீ**

அந்தப் பெண்ணின், முன்னங்கையின் நீளம் **= 32 செ.மீ**

**உங்கள் பயிற்சிக்காக....**

6.

| $x$ | 1 | 4 | 9 | 16 |
|---|---|---|---|---|
| $y$ | 2 | 5 | 10 | 17 |

$y = ax + b$, இங்கு $a, b$ ஆகியன மாறிலிகளாகும்.

i) இந்த தொடர்பு சார்பாகுமா? என சோதிக்க

ii) $a$ மற்றும் $b$ ஐக் காண்க.

iii) $x = 2$ எனும் போது $y$ ன் மதிப்பை காண்க.

**விடை:** i) $f$ ஒரு சார்பாகும் ii) $a = 1, b = 1$ iii) $y = 3$

www.Padasalai.Net



## தயாரிக்கப்பட்ட வினாக்கள்

**1. $A = \{1, 2, 3, 4\}, B = \{1, 4, 9, 16, 25\}$ மற்றும் $R = \{(1, 1), (2, 4), (3, 9), (4, 16)\}$ எனில் $R$ ஆனது தொடர்பு எனக் காட்டுக. மேலும் மதிப்பகம், துணை மதிப்பகம், வீச்சகம் ஆகியவற்றைக் காண்க.**

$A = \{1,2,3,4\}$

$B = \{1,4,9,16,25\}$

$R = \{(1,1), (2,4), (3,9), (4,16)\}$




அம்புக்குறிபடத்திலிருந்து, $A$ ல் உள்ள எல்லா உறுப்புகளும் $B$ ல் ஒவ்வொரு நிழல் உரு கொண்டுள்ளது.

$\therefore$ $R$ ஆனது ஒரு சார்பாகும்.

மதிப்பகம் $A = \{1,2,3,4\}$

துணை மதிப்பகம் $B = \{1,4,9,16,25\}$

வீச்சகம் $f = \{1,4,9,16\}$

**2. ஒரு சார்பு $f$ ஆனது $f(x) = 2x + 3$ என வரையறுக்கப்படுகிறது.**

**i) $\frac{f(0)+f(1)}{2}$ ஐக் காண்க. ii) $f(x) = 0$ எனில் $x$ ஐக் காண்க.**

**iii) $f(x) = x$ எனில் $x$ ஐக் காண்க. iv) $f(x) = f(1-x)$ எனில் $x$ ஐக் காண்க.**

கொடுக்கப்பட்டது: $f(x) = 2x + 3$

i) $\frac{f(0)+f(1)}{2}$

$f(0) = 2(0) + 3 = 3$

$f(1) = 2(1) + 3 = 2 + 3 = 5$

$\frac{f(0)+f(1)}{2} = \frac{3+5}{2} = \frac{8}{2} = 4$

ii) $f(x) = 0$

$2x + 3 = 0$

$2x = -3$

$x = \frac{-3}{2}$

iii) $f(x) = x$

$2x + 3 = x$

$2x - x = -3$

$x = -3$

iv) $f(x) = f(1-x)$

$2x + 3 = 2(1-x) + 3$

$= 2 - 2x + 3$

$2x + 2x = 5 - 3$

$4x = 2 \Rightarrow x = \frac{2}{4} = \frac{1}{2}$

**3. $f(x) = 2x - 1$ எனில் பின்வருவனவற்றைக் காண்க.**

**i) $f(1)$ ii) $f(x+1)$ iii) $f(x) + f(1)$**

i) $f(1) = 2(1) - 1 = 2 - 1 = 1$

ii) $f(x+1) = 2(x+1) - 1 = 2x + 2 - 1 = 2x + 1$

iii) $f(x) + f(1) = (2x-1) + (1) = 2x - 1 + 1 = 2x$

**4. $f$ ஆனது $f(x) = 1 - 2x$ என வரையறுக்கப்படுகிறது. மேலும் $f(x^2) = (f(x))^2$ எனில் $x$ ன் மதிப்பைக் காண்க.**

$f(x) = 1 - 2x$

$f(x^2) = (f(x))^2$

$1 - 2x^2 = (1-2x)^2$

$1 - 2x^2 = 1 - 4x + 4x^2$

$4x^2 + 2x^2 - 4x + 1 - 1 = 0$

$6x^2 - 4x = 0$

$x(6x - 4) = 0$

$x = 0$ (அல்லது) $6x - 4 = 0$

$x = \frac{4}{6}$

$x = \frac{2}{3}$

$x = 0, \frac{2}{3}$

www.Padasalai.Net



**5. ஒரு உறவு $f$ ஆனது $f(x) = 2x - 1$ என வரையறுக்கப்பட்டால்,**
**i) $f$ ன் உறுப்புகளை காண்க. ii) $f$ ஒரு சார்பா?**

$f(x) = 2x - 1$ இங்கு $x \in \{2,3,4,5\}$

i) $f(2) = 2(2) - 1 \quad = 4 - 1 \quad = 3$

$f(3) = 2(3) - 1 \quad = 6 - 1 \quad = 5$

$f(4) = 2(4) - 1 \quad = 8 - 1 \quad = 7$

$f(5) = 2(5) - 1 \quad = 10 - 1 \quad = 9$

$f = \{(2,3), (3,5), (4,7), (5,9)\}$

ii) $f$ யின் ஒவ்வொரு மதிப்பக உறுப்பிற்கும் ஒரே ஒரு நிழல் உரு உள்ளது. எனவே $f$ ஆனது ஒரு சார்பாகும்.

**6. 12செ.மீ × 5செ.மீ பக்க அளவுள்ள செவ்வக வடிவத் துண்டிலிருந்து நான்கு மூலைகளிலும் சம அளவுள்ள சதுரங்களை வெட்டி படத்தில் உள்ளவாறு மேல்புறம் திறந்த ஒரு பெட்டி செய்யப்படுகிறது. இந்த பெட்டியின் கன அளவு $V$ எனில், $V$ ஐ $x-$ யின் சார்பாகக் குறிப்பிடுக.**

செவ்வக பெட்டியின் நீளம் = 12 செ.மீ

செவ்வக பெட்டியின் அகலம் = 5 செ.மீ

நான்கு மூலைகளிலும் வெட்டப்படும் சதுரத்தின் அளவு

$= x$ செ.மீ




தற்போது திறந்த பெட்டியின் அளவுகளை காண்போம்

திறந்த பெட்டியின் நீளம் = $12 - 2x$ செ.மீ

திறந்த பெட்டியின் அகலம்= $5 - 2x$ செ.மீ

உயரம் $= x$ செ.மீ

திறந்த பெட்டியின் கன அளவு

$V = lbh$

$= (12 - 2x)\,(5 - 2x)\,(x)$

$= (60 - 24x - 10x + 4x^2)\,(x)$

$V = 4x^3 - 34x^2 + 60x$

**7. $A = \{1, 4, 9, 16\}$ மற்றும் $B = \{-1, 2, -3, -4, 5, 6\}$ எனில், $A$ லிருந்து $B$ க்கு பின்வரும் உறவுகளில் எவை சார்பாகும்? i) $R_1 = \{(1,-1), (4,2), (9,-3), (16,-4)\}$**
**ii) $R_2 = \{(1,-4), (1,-1), (9,-3), (16,2)\}$ iii) $R_3 = \{(4,2), (1,2), (9,2), (16,2)\}$**

| | | |
|---|---|---|
| i) $R_1$ $= \{(1,-1), (4,2), (9,-3), (16,-4)\}$<br><br><br>அம்புக்குறி படத்திலிருந்து, $A$ ல் உள்ள ஒவ்வொரு உறுப்பிற்கும் $B$ ல் ஒரே ஒரு நிழல் உரு உள்ளது.<br>**$R_1$ ஆனது ஒரு சார்பாகும்.** | ii) $R_2$ $= \{(1,-4), (1,-1), (9,-3), (16,2)\}$<br><br><br>அம்புக்குறி படத்திலிருந்து, $R_2$ **ஆனது சார்பல்ல.** ஏனெனில் 1 ஆனது $-1$ மற்றும் $-4$ ஆகிய நிழல் உருக்களை கொண்டுள்ளது. மேலும் 4 க்கு நிழல் உரு இல்லை | iii) $R_3$ $= \{(4,2), (1,2), (9,2), (16,2)\}$<br><br><br>அம்புக்குறி படத்திலிருந்து, $A$ ல் உள்ள ஒவ்வொரு உறுப்பிற்கும் $B$ ல் ஒரே ஒரு நிழல் உரு உள்ளது.<br>**$R_3$ ஆனது ஒரு சார்பாகும்.** |

www.Padasalai.Net



## பயிற்சி 1.4 க்கான அறிமுகம்

### நினைவில் கொள்ள…

- ✓ சார்புகளை குறிக்கும் முறை
  (i) வரிசைச் சோடிகளின் கணம் (ii) அட்டவணை முறை (iii) அம்புக்குறி படம் (iv) வரைபடம்
- ✓ **குத்துக்கோட்டுச் சோதனை (Vertical line test):** வளைவரையை ஒவ்வொரு குத்துக்கோடும் அதிகபட்சம் ஒரு புள்ளியில் வெட்டினால் அவ்வளைவரை ஒரு சார்பினைக் குறிக்கும்.
- ✓ **கிடைமட்டக்கோட்டுச் சோதனை (Horizontal line test):** வளைவரை ஒன்றுக்கொன்றான சார்பைக் குறித்தால், வரையப்படும் கிடைமட்டக்கோடு வளைவரையை அதிகபட்சமாக ஒரு புள்ளியில் மட்டுமே வெட்டும்.
- ✓ ஒவ்வொரு சார்பையும், ஒரு வளைவரையாக (curve) வரைபடத்தில் குறிப்பிடலாம். ஆனால் வரைபடத்தில் வரையப்படும் அனைத்து வரைளவரைகளும் சார்பாகாது.

| வ.எண் | பெயர் | வரையறை | விளக்கம் |
|---|---|---|---|
| 1 | **ஒன்றுக்கு ஒன்றான சார்பு (ஒரு புறச் சார்பு)** | $f: A \to B$ என்பது சார்பு என்க. $A$ன் வெவ்வேறான உறுப்புகளை $B$ ல் உள்ள வெவ்வேறு உறுப்புகளுடன் $f$ ஆனது தொடர்புபடுத்துமானால், $f$ என்பது **ஒன்றுக்கு ஒன்றான சார்பு** ஆகும். |  |
| 2 | **பலவற்றிற்கு ஒன்றான சார்பு** | சார்பு $f: A \to B$ ஐ **பலவற்றிற்கு ஒன்றான சார்பு** எனில், அச்சார்பில் $A$-ன் ஒன்றிற்கு மேற்பட்ட உறுப்புகளுக்கு, $B$ -ல் ஒரே நிழல் உரு இருக்கும். |  |
| 3 | **மேல் சார்பு (மேல்புறச் சார்பு)** | $f: A \to B$ என்ற ஒரு சார்பு, **மேல் சார்பு** எனில் $f$ -ன் வீச்சகமானது, $f$ -ன் துணை மதிப்பகத்திற்குச் சமமாக இருக்கும். $f(A) = B$ |  |
| 4 | **உட்சார்பு** | ஒரு சார்பு $f: A \to B$ ஆனது **உட்சார்பு** எனில், $B$ -ல் குறைந்தபட்சம் ஓர் உறுப்பிற்காவது, $A$ -ல் முன் உரு இருக்காது. |  |
| 5 | **மாறிலிச் சார்பு** | சார்பு $f: A \to B$ ஆனது **மாறிலிச் சார்பு** எனில், $f$ -ன் வீச்சகமானது ஒரே ஓர் உறுப்பைக் கொண்டதாகும். அதாவது, $f(x) = c$, அனைத்து $x \in A$ ஏதேனும் ஒரு நிலையான $c \in B$. |  |
| 6 | **சமனிச் சார்பு** | $A$ ஒரு வெற்றிலா கணம் என்க. சார்பு $f: A \to A$ ஆனது $f(x) = x$ அனைத்து $x \in A$ , என வரையறுக்கப்பட்டால், அந்த சார்பு $A$ -யின் **சமனிச் சார்பு** எனப்படும். இதை $I_A$ எனக் குறிக்கலாம். |  |
| 7 | **இருபுறச் சார்பு** | $f: A \to B$ என்ற சார்பு, ஒன்றுக்கு ஒன்றாகவும் மற்றும் மேல்சார்பாகவும் இருந்தால், $f$ -ஐ $A$ -லிருந்து -$B$ க்கான இருபுறச்சார்பு என்கிறோம். |  |
| 8 | **மெய் மதிப்புச் சார்பு** | சார்பு $f: A \to B$ ஆனது **மெய் மதிப்புச் சார்பு** எனில், $f$-யின் வீச்சகமானது, $R$ எனும் மெய்யெண்களின் உட்கணமாக இருக்கும். அதாவது $f(A) \subseteq R$ | |

**முன்னேற்றச் சோதனை** புத்தக பக்க எண்: 24

**சரியா அல்லது தவறா?**

1. எல்லா ஒன்றுக்கு ஒன்று சார்புகளும் மேல் சார்பாகும். - **தவறு**

அருகிலுள்ள சார்பு $f:A\to B$ ஆனது ஒன்றுக்கு ஒன்றான சார்பு ஆனால் மேல்சார்பு அல்ல. ஏனெனில் $f$ ன் வீச்சு $f$ ன் துணைமதிப்பகத்திற்கு சமமல்ல.




2. $n(A)=4, n(B)=3$ ஆக இருக்கும்பொழுது A லிருந்து B க்கு அமையும் சார்பு ஒன்றுக்கொன்றாக இருக்காது – **சரி**

$f$ ஆனது ஒன்றுக்கொன்றான சார்பாகும். A ல் உள்ள வெவ்வேறு உறுப்புகளுக்கு B-ல் நிழல் உரு உள்ளது. ஆனால் 2 மற்றும் 4 க்கு ஒரே நிழல் உரு உள்ளது.
இங்கு $n(A)=4$ $n(B)=3$




3. எல்லா மேல்சார்புகளும் ஒன்றுக்கு ஒன்றான சார்புகளாகும். – **தவறு**

$f$ ன் வீச்சகம் B ஆகும். எனவே இது மேல் சார்பாகும். ஆனால் 'b' மற்றும் 'd' ஆகியவற்றிற்கு ஒரே நிழல் உரு உள்ளது. எனவே இது ஒன்றுக்கு ஒன்றான சார்பு அல்ல.




4. $n(A)=4, n(B)=5$ ஆக இருக்கும்போது A யிலிருந்து B க்கான சார்பு மேல் சார்பாக இருக்க முடியாது. – **சரி**

f ன் வீச்சகம் B க்கு சமமாக இல்லை.
$n(A)\neq n(B)$
இங்கு, $n(A)=4, n(B)=5$




5. A லிருந்து B க்கான சார்பு $f$ ஆனது, ஓர் இருபுறச்சார்பு எனில் $n(A)=n(B)$- **சரி**

$f:A\to B$ ஆனது ஒன்றுக்கு ஒன்றான மற்றும் மேல்புறச்சார்பாகும்.(இருபுறச்சார்பு)
இங்கு $n(A)=3,\ n(B)=3$




6. $n(A)=n(B)$ எனில் $f$ ஆனது, A யிலிருந்து B க்கு ஓர் இருபுறச்சார்பு – **சரி**

$f:A\to B$ ஆனது ஒன்றுக்கு ஒன்றான மற்றும் மேல்புறச்சார்பாகும்.(இருபுறச்சார்பு)
இங்கு $n(A)=3,\ n(B)=3$




7. எல்லா மாறிலிச் சார்புகளும் இருபுறச் சார்புகளாகும். – **தவறு**

வெவ்வேறு உறுப்புகளுக்கு வெவ்வேறு நிழல் உரு இல்லை. இது ஒன்றுக்கு ஒன்று சார்பு அல்ல.
எனவே இது இருபுறச்சார்பு அல்ல.
$n(A)\neq n(B)$




**சிந்தனைக் களம்**

| | |
|---|---|
| ஒன்றிற்குப் பல என்ற சார்பு இருக்க முடியுமா? | **புத்தக பக்க எண்:** 21 |
| அவ்வாறு இருக்க **வாய்ப்பில்லை.** அவ்வாறு இருப்பின், வரையறையின் படி, அவ்வுறவு சார்பாகாது. | |
| சமனிச் சார்பு ஒன்றுக்கு ஒன்றான சார்பாகுமா? | **புத்தக பக்க எண்:** 24 |
| **ஆம்.** சமனிச் சார்பு ஒன்றுக்கு ஒன்றான சார்பாகும் | |

## பயிற்சி 1.4

1. **கீழேக் கொடுக்கப்பட்ட வரைபடங்கள் சார்பைக் குறிக்கின்றனவா எனத் தீர்மானிக்கவும். விடைகளுக்கான காரணத்தையும் கொடுக்கவும்**

(i)







குத்துக்கோட்டுச் சோதனையிலிருந்து கொடுக்கப்பட்ட வளைவரையானது, **சார்பை குறிக்கவில்லை** என தெளிவாகிறது. ஏனெனில் வளைவரையை குத்துக்கோடு P மற்றும் Q ஆகிய இரு புள்ளிகளில் சந்திக்கிறது.

www.Padasalai.Net



| (ii) | (iii) | (iv) |
|---|---|---|
|  |  |  |
| கொடுக்கப்பட்ட வளைவரையானது, **சார்பை குறிக்கிறது.** ஏனெனில் வளைவரையை குத்துக்கோடு P என்ற ஒரு புள்ளியில் மட்டுமே சந்திக்கிறது. | கொடுக்கப்பட்ட வளைவரையானது, **சார்பை குறிக்கவில்லை.** ஏனெனில் வளைவரையை குத்துக்கோடு P,Q மற்றும் R ஆகிய மூன்று புள்ளிகளில் சந்திக்கிறது. | கொடுக்கப்பட்ட நேர்க்கோடானது, **சார்பை குறிக்கிறது.** ஏனெனில் நேர்க்கோட்டை குத்துக்கோடு, P என்ற ஒரு புள்ளியில் மட்டுமே சந்திக்கிறது. |

**2.** $\boldsymbol{f: A \to B}$ **என்ற சார்பானது** $\boldsymbol{f(x) = \frac{x}{2} - 1}$**, என வரையறுக்கப்படுகிறது.இங்கு,** $\boldsymbol{A = \{2, 4, 6, 10, 12\}}$, $\boldsymbol{B = \{0, 1, 2, 4, 5, 9\}}$**. ஆக இருக்கும் பொழுது சார்பு** $\boldsymbol{f}$**-ஐ பின்வரும் முறைகளில் குறிக்க**
**(i) வரிசைச் சோடிகளின் கணம் (ii) அட்டவணை (iii) அம்புக்குறி படம் (iv) வரைபடம்**

$A = \{2,4,6,10,12\}, B = \{0,1,2,4,5,9\}$

$f(x) = \frac{x}{2} - 1$

எனவே, $f(2) = \frac{2}{2} - 1 = 1 - 1 = 0$

$f(4) = \frac{4}{2} - 1 = 2 - 1 = 1$

$f(6) = \frac{6}{2} - 1 = 3 - 1 = 2$

$f(10) = \frac{10}{2} - 1 = 5 - 1 = 4$

$f(12) = \frac{12}{2} - 1 = 6 - 1 = 5$

**உங்கள் பயிற்சிக்காக....**

1. $A = \{6,9,15,18,21\}$; $B = \{1,2,4,5,6\}$ மற்றும் $f: A \to B$ ஆனது $f(x) = \frac{x-3}{3}$ என வரையறுக்கப்பட்டால், $f$ ஐ
   i) அம்புக்குறிப்படம்
   ii) வரிசைச்சோடிகளின் கணம்
   iii) அட்டவணை
   iv) வரைபடம் ஆகியவற்றால் குறிக்க.

**(i) வரிசைச் சோடிகளின் கணம்**

$f = \{(2,0), (4,1), (6,2), (10,4), (12,5)\}$

(ii) **அட்டவணை**

| $x$ | 2 | 4 | 6 | 10 | 12 |
|---|---|---|---|---|---|
| $f(x)$ | 0 | 1 | 2 | 4 | 5 |

(iii) **அம்புக்குறி படம்**




(iv) **வரைபடம்**



**3. $f = \{(1,2),(2,2),(3,2),(4,3),(5,4)\}$ என்ற சார்பினை (i) அம்புக்குறி படம் (ii) அட்டவணை (iii) வரைபடம் மூலமாகக் குறிக்கவும்.**

$f = \{(1,2),(2,2),(3,2),(4,3),(5,4)\}$

(i) **அம்புக்குறி படம்**




**உங்கள் பயிற்சிக்காக....**
2. $f = \{(-1,2),(-3,1),(-5,6),(-4,3)\}$ என்ற சார்பை
i) அட்டவணை
ii) அம்புக்குறிப்படம்
ஆகியவற்றால் குறிக்க

(ii) **அட்டவணை**

| $x$ | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| $f(x)$ | 2 | 2 | 2 | 3 | 4 |

(iii) **வரைபடம்**




**4. $f: \mathbb{N} \to \mathbb{N}$ என்ற சார்பு $f(x) = 2x - 1$ என வரையறுக்கப்பட்டால் அது ஒன்றுக்கு ஒன்றான ஆனால் மேல் சார்பு இல்லை எனக் காட்டுக.**

$f: \mathbb{N} \to \mathbb{N}$ என்ற சார்பு $f(x) = 2x - 1$ என வரையறுக்கப்படுகிறது.

$x = 1$ எனில், $f(1) = 2(1) - 1 = 1$

$x = 2$ எனில், $f(2) = 2(2) - 1 = 3$

$x = 3$ எனில், $f(3) = 2(3) - 1 = 5$

**அம்புக்குறிபடம்**




**உங்கள் பயிற்சிக்காக....**
3. $f: N \to N$ என்ற சார்பு $f(x) = 3x - 2$ என வரையறுக்கப்பட்டால் அது ஒன்றுக்கு ஒன்றான ஆனால் மேல் சார்பு இல்லை எனக் காட்டுக.
**விடை:** வினா எண் 4இன் முடிவே இந்த வினாவிற்கும் பொருந்தும்

$f: N \to N$ என்ற சார்பில் $N$ ல் உள்ள ஒவ்வொரு உறுப்புக்கும் $N$ ல் வெவ்வேறு உறுப்புகளுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. எனவே $f$ **ஆனது ஒன்றுக்கு ஒன்றான சார்பாகும்.** ஆனால் துணைமதிப்பகத்தில் உள்ள இரட்டைப்படை எண்களுக்கு மதிப்பகத்தில் முன்உரு இல்லை எனவே $f$ **ஆனது மேல் சார்பு இல்லை.**

**5. $f: \mathbb{N} \to \mathbb{N}$ என்ற சார்பு $f(m) = m^2 + m + 3$ என வரையறுக்கப்பட்டால் அது ஒன்றுக்கு ஒன்றான சார்பு எனக் காட்டுக.**

$f: \mathbb{N} \to \mathbb{N}$ என்ற சார்பு $f(m) = m^2 + m + 3$ என வரையறுக்கப்படுகிறது.

$m = 1, f(1) = (1)^2 + 1 + 3 = 1 + 1 + 3 = 5$

$m = 2, f(2) = (2)^2 + 2 + 3 = 4 + 2 + 3 = 9$

$m = 3, f(3) = (3)^2 + 3 + 3 = 9 + 3 + 3 = 15$

$m = 4, f(4) = (4)^2 + 4 + 3 = 16 + 4 + 3 = 23$

**உங்கள் பயிற்சிக்காக....**
4. $f: N \to N$என்ற சார்பு $f(x) = x^2 + x + 1$ என வரையறுக்கப்பட்டால் அது மேல் சார்பு எனக் காட்டுக.
**விடை:** $N$ -ன் வெவ்வேறான உறுப்புகளை $N$ ல் உள்ள வெவ்வேறு உறுப்புகளுடன் $f$ ஆனது தொடர்புபடுத்துவதால், $f$ ஆனது **ஒன்றுக்கு ஒன்றான சார்பு** ஆகும்.

$N$ -ன் வெவ்வேறான உறுப்புகளை $N$ ல் உள்ள வெவ்வேறு உறுப்புகளுடன் $f$ ஆனது தொடர்புபடுத்துவதால், $f$ ஆனது **ஒன்றுக்கு ஒன்றான சார்பு** ஆகும்.

**6. $A = \{1,2,3,4\}$ மற்றும் $B = \mathbb{N}$ என்க. மேலும் $f: A \to B$ ஆனது, $f(x) = x^3$ என வரையறுக்கப்படுகிறது எனில், (i) $f$- யின் வீச்சகத்தைக் காண்க. (ii) $f$ எவ்வகை சார்பு எனக் காண்க**

$A = \{1,2,3,4\}$ , $B = \{1,2,3, \dots\}$

கொடுக்கப்பட்டது: $f: A \to B$ மற்றும் $f(x) = x^3$

(i) $f(1) = 1^3 = 1, f(3) = 3^3 = 27$

$f(2) = 2^3 = 8,\ f(4) = 4^3 = 64$

$f$- ன் வீச்சகம் $= \{1,8,27,64\}$

**உங்கள் பயிற்சிக்காக....**
5. $A = \{1,2,3,4,5\}$, $B = N$ மற்றும் $f: A \to B$ ஆனது $f(x) = x^3$ என வரையறுக்கப்பட்டால்,
i) $f$ ன் வீச்சகம் ii) சார்பின் வகையைக் காண்க.
**விடை:** i) $f$ ன் வீச்சகம் $= \{1,8,27,64,125\}$
ii) ஒன்றுக்கு ஒன்றான சார்பு.

(ii) $A$ யின் வெவ்வேறான உறுப்புகளை $B$ ல் உள்ள வெவ்வேறு உறுப்புகளுடன் $f$ ஆனது தொடர்புபடுத்துவதால், $f$ என்பது **ஒன்றுக்கு ஒன்றான சார்பு** ஆகும். $2 \in B$ க்கு $A$ ல் முன்உரு இல்லாததால் இது ஒரு **உட்சார்பு** ஆகும்.



www.Padasalai.Net

www.Padasalai.Net



**7. கீழேக் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு சார்பும் இருபுறச் சார்பா, இல்லையா? உன் விடைக்கான காரணத்தைக் கூறுக.**

<table>
<tr>
<td>

**(i) $f:\mathbb{R}\to\mathbb{R}$ ஆனது $f(x)=2x+1$**

$f(x)=2x+1$

$f(0)=2(0)+1=1$

$f(1)=2(1)+1=3$

$f(2)=2(2)+1=5$

$f(-1)=2(-1)+1=-1$

$f(-2)=2(-2)+1=-3$

$f(-3)=2(-3)+1=-5$




$f$- ன் வீச்சகம்= $\{1,3,5,-1,-3,-5\}$

$A$ ன் வெவ்வேறு உறுப்புகளுக்கு $B$ ல் வெவ்வேறு நிழல் உரு உள்ளது மற்றும் $B$ ன் ஒவ்வொரு உறுப்பிற்கும் $A$ ல் முன்உரு உள்ளது. எனவே $f$ **இருபுறச் சார்பு** ஆகும்.

</td>
<td>

**(ii) $f:\mathbb{R}\to\mathbb{R}$ ஆனது $f(x)=3-4x^2$**

$f(x)=3-4x^2$

$f(0)=3-4(0)^2=3$

$f(1)=3-4(1)^2=-1$

$f(2)=3-4(2)^2=-13$

$f(-1)=3-4(-1)^2=-1$




$A$ ல் உள்ள வெவ்வேறு உறுப்புகள் 1 மற்றும் $-1$ க்கு $B$ ல் ஒரே நிழல் உரு உள்ளது. **எனவே $f$ ஆனது ஒன்றுக்கு ஒன்றான சார்பு அல்ல.** ஆனால் $B$ ல் உள்ள ஒவ்வொரு உறுப்புக்கும் $A$ ல் முன்உரு உள்ளது எனவே $f$ **ஆனது மேல்சார்பு ஆகும்.**

எனவே $f$ **இருபுறச் சார்பு அல்ல.**

</td>
</tr>
</table>

**8. $A=\{-1,1\}$ மற்றும் $B=\{0,2\}$ என்க. மேலும், $f:A\to B$ ஆனது $f(x)=ax+b$ என வரையறுக்கப்பட்ட மேல்சார்பு எனில், $a$ மற்றும் $b-$ ஐக் காண்க.**

கொடுக்கப்பட்டது. $A=\{-1,1\}$ மற்றும் $B=\{0,2\}$

$f:A\to B$ ஆனது $f(x)=ax+b$ என வரையறுக்கப்பட்ட மேல்சார்பு




[$f$ ன் வீச்சகம் = துணைமதிப்பகம்]

$f(-1)=0\Rightarrow a(-1)+b=0$

$f(1)=2\Rightarrow a(1)+b=2$

$-a+b=0$ ........(1)

$a+b=2$ ......(2)

(1)+(2) $\quad 2b=2$

$b=1$

$b=1$ என (2) ல் பிரதியிட

$a+1=2$

$a=2-1=1$

எனவே, **$a=1$ மற்றும் $b=1$**

> **உங்கள் பயிற்சிக்காக....**
>
> 6. $A=\{0,1\}$ மற்றும் $B=\{1,3\}$. $f:A\to B$ ஆனது $ax+b$ என வரையறுக்கப்படுகிறது. மேலும் இது மேல் சார்பு ஆகும் எனில் $a$ மற்றும் $b$யை காண்க.
>
> **விடை:** $a=2\,, b=1$

**9. $f$ என்ற சார்பானது $f(x)=\begin{cases} x+2\,; & x>1 \\ 2\,; & -1\le x\le 1 \\ x-1; & -3<x<-1\end{cases}$ என வரையறுக்கப்பட்டால்**

**(i) $f(3)$ (ii) $f(0)$ (iii) $f(-1.5)$ (iv) $f(2)+f(-2)$ ஆகியவற்றின் மதிப்புகளைக் காண்க.**

$$f(x)=\begin{cases} x+2 & ;\ x>1 \quad \text{இங்கு } x=2,3,4 \\ 2 & ;-1\le x\le 1 \quad \text{இங்கு } x=\{-1,0,1\} \\ x-1 & ;-3<x<-1 \quad \text{இங்கு } x=-2\end{cases}$$

> **உங்கள் பயிற்சிக்காக....**
>
> 7. $f$ என்ற சார்பானது
> $f(x)=\begin{cases} 4x^2-1; & -3\le x<2 \\ 3x-2; & 2\le x\le 4 \\ 2x-3; & 4<x<7\end{cases}$ என வரையறுக்கப்பட்டால்
> (i) $f(5)+f(6)$ (ii) $f(1)-f(-3)$
> (iii) $f(-2)-f(4)$ ஆகியவற்றின் மதிப்புகளைக் காண்க.
>
> **விடை:** (i) $f(5)+f(6)=16$
> (ii) $f(1)-f(-3)=-32$
> (iii) $f(-2)-f(4)=5$

| | |
|---|---|
| (i) $f(3)$<br>$x=3$ எனில், $f(x)=x+2$<br>$f(3)=3+2=\mathbf{5}$ | (ii) $f(0)$<br>$x=0$ எனில், $f(x)=2$<br>$f(0)=\mathbf{2}$ |
| (iii) $f(-1.5)$<br>$x=-1.5$ எனில்,<br>$f(x)=x-1$<br>$f(-1.5)=-1.5-1=\mathbf{-2.5}$ | (iv) $f(2)+f(-2)$<br>$x=2$ எனில், $f(x)=x+2\Rightarrow f(2)=2+2=4$<br>$x=-2$ எனில், $f(x)=x-1\Rightarrow f(-2)=-2-1=-3$<br>$f(2)+f(-2)=4+(-3)=\mathbf{1}$ |

www.Padasalai.Net



**10.** $f: [-5, 9] \to \mathbb{R}$ **என்ற சார்பானது பின்வருமாறு வரையறுக்கப்படுகிறது**

$$f(x) = \begin{cases} 6x+1 & ; -5 \le x < 2 \\ 5x^2-1 & ; 2 \le x < 6 \\ 3x-4 & ; 6 \le x \le 9 \end{cases}$$ **என வரையறுக்கப்படுகிறது எனில், பின்வருவனவற்றைக் காண்க.**

**(i)** $f(-3)+f(2)$ **(ii)** $f(7)-f(1)$ **(iii)** $2f(4)+f(8)$ **(iv)** $\frac{2f(-2)-f(6)}{f(4)+f(-2)}$

$$f(x) = \begin{cases} 6x+1 & if\ -5 \le x < 2 & ;\text{ இங்கு } x = -5,-4,-3,-2,-1,0,1 \\ 5x^2-1 & if\ 2 \le x < 6 & ;\text{ இங்கு } x = 2,3,4,5 \\ 3x-4 & if\ 6 \le x \le 9 & ;\text{ இங்கு } x = 6,7,8,9 \end{cases}$$

| | |
|---|---|
| (i) $f(-3)+f(2)$<br>$x=-3$ எனில்,<br>$f(x)=6x+1$<br>$f(-3)=6(-3)+1=-18+1=-17$<br>$x=2$ எனில்,<br>$f(x)=5x^2-1$<br>$f(2)=5(2)^2-1=20-1=19$<br>$f(-3)+f(2)=-17+19=\mathbf{2}$ | (ii) $f(7)-f(1)$ PTA-4<br>$x=7$ எனில்,<br>$f(x)=3x-4$<br>$f(7)=3(7)-4=21-4=17$<br>$x=1$ எனில்,<br>$f(x)=6x+1$<br>$f(1)=6(1)+1=6+1=7$<br>$\therefore f(7)-f(1)=17-7=\mathbf{10}$ |
| (iii) $2f(4)+f(8)$<br>$x=4$ எனில்,<br>$f(x)=5x^2-1$<br>$f(4)=5(4)^2-1$<br>$=80-1$<br>$=79$<br>$x=8$ எனில், $f(x)=3x-4$<br>$f(8)=3(8)-4$<br>$=24-4=20$<br>$2f(4)+f(8)=2(79)+20$<br>$=158+20 = \mathbf{178}$ | (iv) $\frac{2f(-2)-f(6)}{f(4)+f(-2)}$ PTA-4<br>$x=-2$ எனில், $f(x)=6x+1$<br>$f(-2)=6(-2)+1=-12+1=-11$<br>$x=6$ எனில், $f(x)=3x-4$<br>$f(6)=3(6)-4$<br>$=18-4=14$<br>$x=4$ எனில், $f(x)=5x^2-1$<br>$f(4)=5(4)^2-1=80-1=79$<br>$\frac{2f(-2)-f(6)}{f(4)+f(-2)}=\frac{2(-11)-14}{79+(-11)}$<br>$=\frac{-22-14}{79-11}=\frac{-36}{68}=-\mathbf{\frac{9}{17}}$ |

**11.** **புவியீர்ப்பு விசையின் காரணமாக** $t$ **வினாடிகளில் ஒரு பொருள் கடக்கும் தூரமானது** $S(t)=\frac{1}{2}gt^2+at+b$ **எனக் கொடுக்கப்பட்டுள்ளது. இங்கு** $a, b$ **ஆகியவை மாறிலிகள் (**$g$ **ஆனது புவியீர்ப்பு விசையின் காரணமாக ஏற்படும் முடுக்கம்).** $S(t)$ **ஆனது ஒன்றுக்கொன்றான சார்பாகுமா என ஆராய்க.**

கொடுக்கப்பட்டது: $S(t)=\frac{1}{2}gt^2+at+b$ ($a, b$ ஆகியவை மாறிலிகள்) PTA-3

$t = 1,2,3,\ldots$ வினாடிகள் என எடுத்துக்கொள்ள

$t=1$, $S(1)=\frac{1}{2}g(1)^2+a(1)+b = \frac{1}{2}g+a+b = \mathbf{0.5g+a+b}$

$t=2$, $S(2)=\frac{1}{2}g(2)^2+a(2)+b = \mathbf{2g+2a+b}$

$t=3$, $S(3)=\frac{1}{2}g(3)^2+a(3)+b = \mathbf{4.5g+3a+b}$

ஆம், $A$ யின் வெவ்வேறு உறுப்புகளுக்கு $B$ ல் வெவ்வேறு நிழல் உரு உள்ளது. எனவே **இது ஒன்றுக்கு ஒன்றான சார்பாகும்.**

**12.** $t$ என்ற சார்பானது செல்சியஸில் $(C)$ உள்ள வெப்பநிலையையும், பாரன்ஹீட்டில் $(F)$ உள்ள வெப்பநிலையும் இணைக்கும் சார்பாகும். மேலும் அது $t(C) = F$ என வரையறுக்கப்பட்டால், (இங்கு $F = \frac{9}{5}C + 32$). (i) $t(0)$ (ii) $t(28)$ (iii) $t(-10)$ (iv) $t(C) = 212$ ஆக இருக்கும்போது $C$ –ன் மதிப்பு (v) செல்சியஸ் மதிப்பும் பாரன்ஹீட் மதிப்பும் சமமாக இருக்கும் பொழுது வெப்பநிலை ஆகியவற்றைக் கண்டறிக.

$t$ என்ற சார்பானது $t(C) = F$ என வரையறுக்கபடுகிறது. இங்கு $F = \frac{9}{5}C + 32$ PTA-1

| | |
|---|---|
| (i) $t(0) = \frac{9}{5}(0) + 32 = 32°F$<br><br>(ii) $t(28) = \frac{9}{5}(28) + 32$<br>$= 9(5.6) + 32$<br>$= 50.4 + 32$<br>$= \mathbf{82.4°F}$<br><br>(iii) $t(-10) = \frac{9}{5}(-10) + 32$<br>$= -18 + 32$<br>$= \mathbf{14°F}$<br><br>(iv) $t(C) = 212$ எனில்<br>$\frac{9}{5}C + 32 = 212$<br>$\frac{9}{5}C = 212 - 32 = 180$<br>$C = \frac{180\times5}{9} = \mathbf{100°C}$ | (v) $t(C) = F$ இங்கு $F = \frac{9}{5}C + 32$<br>$t(F) = C$ இங்கு $C = \frac{9}{5}F + 32$<br>செல்சியஸ் மதிப்பும் பாரன்ஹீட் மதிப்பும் சமமாக இருக்கும் பொழுது வெப்பநிலையை $t$ என கொள்ள<br>$t = \frac{9}{5}t + 32°$<br>$t - \frac{9}{5}t = 32°$<br>இருபுறமும் $\left(-\frac{5}{4}\right)$ ஆல் பெருக்க<br>$-\frac{5}{4}\left(t - \frac{9}{5}t\right) = 32° \times \left(-\frac{5}{4}\right)$<br>$-\frac{5}{4}t + \frac{9}{4}t = -40°$<br>$\frac{-5t+9t}{4} = -40°$<br>$\frac{4t}{4} = -40° \Rightarrow \mathbf{t = -40°}$ |

## தயாரிக்கப்பட்ட வினாக்கள்

**1.** $\mathbf{R = \{(x, -2), (-5, y)\}}$ **என்பது சமனிச் சார்பைக் குறிக்குமெனில் $x$ மற்றும் $y$ ஆகியவற்றின் மதிப்புகளைக் காண்க.** PTA-6

$R$ என்பது சமனிச் சார்பைக் குறிப்பதால்,

$x = -2, y = -5$

**2.** $\mathbf{A = \{1, 2, 3, 4\}}$ **மற்றும்** $\mathbf{B = \mathbb{N}}$ **என்க. மேலும் ஆனது என வரையறுக்கப்படுகிறது எனில், (i) $f$- யின் வீச்சகத்தைக் காண்க. (ii) $f$ எவ்வகை சார்பு எனக் காண்க** PTA-5

$A = \{1,2,3,4\}$, $B = \{1,2,3, \dots\}$

கொடுக்கப்பட்டது: $f: A \to B$ மற்றும் $f(x) = x^3$

$f(1) = 1^2 = 1$, $f(3) = 3^2 = 9$

$f(2) = 2^2 = 4$, $f(4) = 4^2 = 16$

(i) $f$ ன் வீச்சகம் $= \{1, 4, 9, 16\}$

(ii) $A$ –யின் வெவ்வேறான உறுப்புகளை $B$ ல் உள்ள வெவ்வேறு உறுப்புகளுடன் $f$ ஆனது தொடர்புபடுவதால், $f$ என்பது ஒன்றுக்கு ஒன்றான சார்பு ஆகும். $2 \in B$ க்கு $A$ ல் முன்உரு இல்லாததால் இது ஒரு உட்சார்பு ஆகும்.

**3.** $\mathbf{A = \{1, -2, -3, 4. -5\}}$ **மற்றும்** $\mathbf{f: A \to B}$ **ஆனது** $\mathbf{f(x) = x^2 + x + 1}$ **என வரையறுக்கப்படுகிறது. மேலும் இது மேல்சார்பாகும். எனில் $B$ ஐ காண்க.**

கொடுக்கப்பட்டது: $A = \{1, -2, -3, 4, -5\}$

$f(x) = x^2 + x + 1$

$f(1) = 1^2 + 1 + 1 = 3$

$f(-2) = (-2)^2 - 2 + 1$
$= 4 - 2 + 1 = 3$

$f(-3) = (-3)^2 - 3 + 1$
$= 9 - 3 + 1 = 7$

$f(4) = (4)^2 + 4 + 1$
$= 16 + 4 + 1 = 21$

$f(-5) = (-5)^2 - 5 + 1$
$= 25 - 5 + 1 = 21$

$f$ என்பது மேல்சார்பு ஆகும்.

$f = B = f$ ன் துணை மதிப்பகம்

$B = \{3,7,21\}$

www.Padasalai.Net



**4.** $\boldsymbol{A = \{0, 1, 2, 3\}}$ **மற்றும்** $\boldsymbol{B = \{1, 3, 5, 7, 9\}}$ **என்பன இரு கணங்கள் என்க.** $\boldsymbol{f: A \to B}$ **எனும் சார்பு** $\boldsymbol{f(x) = 2x + 1}$ **எனக் கொடுக்கப்பட்டுள்ளது. இச்சார்பினை i) அம்புக்குறி படம் ii) அட்டவணை iii) வரிசைச் சோடிகளின் கணம் iv) வரைபடம் ஆகியவற்றால் குறிக்க.**

$A = \{0,1,2,3\}$, $B = \{1,3,5,7,9\}$

$f(a) = 2x + 1$

$f(0) = 2(0) + 1 = 0 + 1 = 1$

$f(1) = 2(1) + 1 = 2 + 1 = 3$

$f(2) = 2(2) + 1 = 4 + 1 = 5$

$f(3) = 2(3) + 1 = 6 + 1 = 7$

**i) அம்புக்குறி படம்:**




**ii) அட்டவணை:**

| $x$ | 0 | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|
| $f(x)$ | 1 | 3 | 5 | 7 |

**iii) வரிசைச் சோடிகளின் கணம்:**

$f = \{(0,1), (1,3), (2,5), (3,7)\}$

**iv) வரைபடம்:**

புள்ளிகள் $(0,1), (1,3), (2,5), (3,7)$




**5.** $\boldsymbol{f}$ **ஆனது** $\boldsymbol{R}$ **லிருந்து** $\boldsymbol{R}$ **க்கு ஆன சார்பு. மேலும் அது** $\boldsymbol{f(x) = 3x - 2}$ **என வரையறுக்கப்படுகிறது.** $\boldsymbol{(a, 4)}$ **மற்றும்** $\boldsymbol{(1, b)}$ **எனக் கொடுக்கப்பட்டால்** $\boldsymbol{a}$ **மற்றும்** $\boldsymbol{b}$ **யின் மதிப்புகளைக் காண்க.**

$f(x) = 3x - 2; f = \{(x, 3x - 2) / x \in R\}$.

$(a, 4)$ எனில் $a$ ன் நிழல் உரு 4 ஆகும்.

$f(a) = 4 \Rightarrow 3a - 2 = 4 \Rightarrow 3a = 4 + 2 = 6$

$a = 2.$

$(1, b)$ எனில் 1 ன் நிழல் உரு $b$

$f(1) = b$

$3(1) - 2 = b \Rightarrow b = 1$

**6.** $\boldsymbol{A = \{1, 2, 3\}}$, $\boldsymbol{B = \{a, b, c, d\}}$ **மற்றும்** $\boldsymbol{f = \{(1, a)\ (2, b)\ (3, d)\}}$ **ஆனது** $\boldsymbol{A}$ **லிருந்து** $\boldsymbol{B}$ **க்கான சார்பு** $\boldsymbol{f}$ **ஆகும்.** $\boldsymbol{f}$ **ஆனது ஒன்றுக்கு ஒன்றான சார்பு ஆனால் மேல்சார்பு இல்லை எனக் காட்டுக.**

$A = \{1,2,3,4\}$, $B = \{a, b, c, d\}$,

$f = \{(1, a)\ (2, b)\ (3, d)\}$




$A$ லிருந்து $B$ க்கு ஆன சார்பு $f$ ல் $A$ யின் வெவ்வேறு உறுப்புகளுக்கு, $B$ ல் வெவ்வேறு நிழல் உரு உள்ளது. எனவே, $f$ ஒன்றுக்கு ஒன்றான சார்பாகும். துணை மதிப்பகத்தில் உள்ள உறுப்பு $c$ க்கு, மதிப்பகத்தில் முன் உரு இல்லை. எனவே $f$ ஆனது மேல் சார்பு இல்லை.

எனவே $f$ ஆனது ஒன்றுக்கு ஒன்றானது, ஆனால் மேல்சார்பு இல்லை.

**7.** $\boldsymbol{A = \{5, 6, 7, 8\}, B = \{-11, 4, 7, -10, -9, -7, -13\}}$ **மற்றும்** $\boldsymbol{f = \{(x, y) / y = 3 - 2x,\ x \in A, y \in B\}}$

**i)** $\boldsymbol{f}$ **ன் உறுப்புகளை காண்க.**

**ii) துணை மதிப்பகம் காண்க.**

**iii) வீச்சகம் காண்க.**

**iv) சார்பின் வகையை காண்க.**

**v)** $\boldsymbol{-9}$ **மற்றும்** $\boldsymbol{-13}$ **ஆகியவற்றின் முன் உருக்களை காண்க.**

சார்பு $f: A \to B$ ஆனது பின்வருமாறு வரையறுக்கப்படுகிறது.

$f(x) = 3 - 2x$

i) $x = 5$ எனில், $f(5) = 3 - 2(5) = -7$

$x = 6$ எனில், $f(6) = 3 - 2(6) = -9$

$x = 7$ எனில், $f(7) = 3 - 2(7) = -11$

$x = 8$ எனில், $f(8) = 3 - 2(8) = -13$

$f$ ன் உறுப்புகள்

$f = \{(5, -7)\ (6, -9)\ (7, -11)\ (8, -13)\}$

ii) துணை மதிப்பகம்

$= \{-11, 4, 7, -10, -9, -7, -13\}$

iii) $f$ ன் வீச்சகம் $= \{-7, -9, -11, -13\}$

iv) $A$ ல் உள்ள ஒவ்வொரு உறுப்பிற்கும் துணை மதிப்பகத்தில் வெவ்வேறு நிழல் உருக்கள் உள்ளது. எனவே $f$ ஒன்றுக்கு ஒன்றான சார்பாகும்.

v) $-9$ மற்றும் $-13$ ஆகியவற்றின் முன் உருக்கள் முறையே 6 மற்றும் 8 ஆகும்.

**8.** சார்பு $f: R \to R$ ஆனது $f(x) = \begin{cases} 1 + x, & x < -2 \\ 2x - 1, & -2 \le x < 4 \\ 3x^2 - 10 & x \ge 4 \end{cases}$ என வரையறுக்கப்பட்டால்,

i) $f(3)$ ii) $f(-4)$ iii) $f(3) + 2f(1)$ iv) $\frac{2f(3)-3f(-2)}{f(5)}$

ஆகியவற்றின் மதிப்புகளைக் காண்க.

$f$ ன் மதிப்பை 3 இடைவெளிகளில் பின்வருமாறு குறித்து கொள்ள




(i) $x = 3$ என்பது இரண்டாவது இடைவெளியில் உள்ளது. ஆகவே

$f(x) = 2x - 1$

$f(3) = 2(3) - 1$

$= 6 - 1 = 5$

(ii) $x = -4$ என்பது முதலாவது இடைவெளியில் உள்ளது. ஆகவே

$f(x) = 1 + x$

$= 1 + (-4) = -3.$

(iii) (i) லிருந்து $f(3) = 5$

$x = 1$ என்பது இரண்டாவது இடைவெளியில் உள்ளது. ஆகவே

$f(x) = 2x - 1$

$f(1) = 2(1) - 1$

$= 2 - 1 = 1$

$f(x) + 2f(1) = 5 + 2(1)$

$= 5 + 2 = 7$

(iv) $f(3) = 5$

$f(-2)$ ஐக்காண,

$x = -2$ என்பது இரண்டாவது இடைவெளியில் உள்ளது. ஆகவே

$f(x) = 2x - 1$

$f(-2) = 2(-2) - 1$

$= -4 - 1 = -5$

$x = 5$ என்பது மூன்றாவது இடைவெளியில் உள்ளது. ஆகவே

$f(x) = 3x^2 - 10$

$= 3(5)^2 - 10$

$= 75 - 10$

$= 65$

$\frac{2f(3)-3f(-2)}{f(5)} = \frac{2(5)-3(-5)}{f(5)}$

$= \frac{10+15}{65}$

$= \frac{25}{65}$

$= \frac{5}{13}$

**9.** கிடைமட்டக்கோடு சோதனையைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சார்புகளில் எவை ஒன்றுக்கொன்றானவை எனக்காண்க.

i)







கிடைமட்டக்கோடு அதிகபட்சமாக ஒரே ஒரு புள்ளியில் $(P)$ வெட்டுவதால், இது ஒன்றுக்கு ஒன்றான சார்பாகும்.

ii)







கிடைமட்டக்கோடு $P$ மற்றும் $Q$ ஆகிய இரு புள்ளிகளில் வெட்டு வதால், கொடுக்கப்பட்ட வளைவரை ஒன்றுக்கு ஒன்றான சார்பைக் குறிக்காது.

www.Padasalai.Net



## பயிற்சி 1.5 க்கான அறிமுகம்

### நினைவில் கொள்ள...




**வரையறை::** $f: A \to B$ மற்றும் $g: B \to C$ ஆகியன இரண்டு சார்புகள் எனில் $f$ மற்றும் $g$ ன் சார்புகளின் சேர்ப்பு $g \circ f$ ஐ $g \circ f(x) = g(f(x))$ அனைத்து $x \in A$ என வரையறுக்கலாம்.

- ✓ பொதுவாக, ஏதேனும் இரு சார்புகள் $f$ மற்றும் $g$ க்கு, $f \circ g \neq g \circ f$ ஆகும்.எனவே சார்புகளின் சேர்ப்பு செயலி பரிமாற்று விதியை பூர்த்தி செய்வதில்லை.
- ✓ மதிப்பகம் $g$ யின் உட்கணமாக, $g$யின் வீச்சகம் $f$ ஆக இருந்தால் மட்டுமே சார்புகளின் சேர்ப்பு $g \circ f(x)$ இருக்கும்.
- ✓ மூன்று சார்புகளின் சேர்ப்பானது எப்பொழுதும் சேர்ப்பு விதியை பூர்த்தி செய்யும். அதாவது, $f \circ (g \circ h) = (f \circ g) \circ h$.
- ✓ $f: R \to R$ என்ற சார்பானது, $f(x) = mx + c,\ m \neq 0$ என வரையறுக்கப்பட்டால், அது **நேரிய சார்பாகும்.**

ஒரு சில குறிப்பிட்ட நேரிய சார்புகளும் அதன் வரைபடங்களும் கீழேக் கொடுக்கப்பட்டுள்ளன.

| எண் | சார்பு | மதிப்பகம் மற்றும் வரையறை | வரைபடம் |
|---|---|---|---|
| 1 | சமனிச்சார்பு | $f: R \to R$ ஆனது $f(x) = x$ என வரையறுக்கப்படுகிறது. |  |
| 2 | கூட்டல் தலைகீழிச்சார்பு | $f: R \to R$ ஆனது $f(x) = -x$ என வரையறுக்கப்படுகிறது. |  |

- ✓ ஒரு சார்பு $f: R \to R, f(x) = ax^2 + bx + c,\ (a \neq 0)$ என வரையறுக்கப்பட்டால், அதை **இருபடிச் சார்பு** என்கிறோம்.

| சார்பு, மதிப்பகம், வீச்சகம் மற்றும் வரையறை | வரைபடம் |
|---|---|
| $f: R \to R$ ஆனது $f(x) = x^2, x \in R$, $f(x) \in [0, \infty)$ என வரையறுக்கப்படுகிறது. |  |
| $f: R \to R$ ஆனது $f(x) = -x^2, x \in R$. $f(x) \in (-\infty, 0]$ என வரையறுக்கபடுகிறது. |  |

| | |
|---|---|
| ஒரு சார்பு $f: R \to R, f(x) = ax^3 + bx^2 + cx + d,\ \ (a \neq 0)$ என வரையறுக்கப்பட்டால், அதைக் **கனச் சார்பு** அல்லது **முப்படி சார்பு** என அழைக்கிறோம். |  |

www.Padasalai.Net



| | |
|---|---|
| ஒரு சார்பு $f: R-\{0\} \to R$ , $f(x)=\frac{1}{x}$ என வரையறுக்கப்பட்டால், அது **தலைகீழ்ச்சார்பு** எனப்படும். |  |
| ஒரு சார்பு $f: R \to R$ ஐ $f(x)=c, \forall x \in R$ என வரையறுக்கப்பட்டால் அது **மாறிலிச்சார்பு** எனப்படும். |  |
| **மட்டு அல்லது மிகை மதிப்புச் சார்பு:** $f: R \to [0,\infty)$ ஆனது $f(x)=\lvert x\rvert=\begin{cases} x\,; x\geq 0 \\ -x\,; x<0\end{cases}$ என வரையறுக்கப்படுகிறது. |  |

மட்டுச்சார்பானது ஒரு நேரிய சார்பு இல்லை. ஆனால் அது இரு நேரிய சார்புகள் $x$ மற்றும் $-x$ கலந்த கலவையாகும்.

## முன்னேற்றச் சோதனை

| புத்தக பக்க எண்: 30 | புத்தக பக்க எண்: 32 |
|---|---|
| பின்வரும் வினாக்களுக்குச் சரியானவற்றைத் தேர்ந்தெடுப்பதன் மூலமாக விடை கூறுக.<br>1. சார்புகளின் சேர்ப்பானது பரிமாற்று விதிக்கு உட்பட்டது.<br>(அ) எப்பொழுதும் உண்மையே<br>(ஆ) ஒரு பொழுதும் உண்மையில்லை<br>**(இ) சில சமயங்களில் உண்மை**<br>உதாரணம்: $f(x)=3+x$, $g(x)=x-4$<br>$f\circ g=f(g(x))$<br>$=f(x-4)$<br>$=3+x-4$<br>$=x-1$<br>$g\circ f=g(f(x))$<br>$=g(3+x)=3+x-4=x-1$<br>இங்கு, $f\circ g=g\circ f$<br><br>2. சார்புகளின் சேர்ப்பானது பரிமாற்று விதிக்கு உட்பட்டது.<br>**(அ) எப்பொழுதும் உண்மையே**<br>(ஆ) ஒரு பொழுதும் உண்மையில்லை<br>(இ) சில சமயங்களில் உண்மை<br>சார்புகளின் சேர்ப்பானது பரிமாற்று விதிக்கு உட்பட்டது<br>அதாவது $f\circ(g\circ h)=(f\circ g)\circ h$ | 1. ஒரு மாறிலிச் சார்பு நேரிய சார்பாகுமா?<br>**ஆம்.** ஒரு மாறிலிச் சார்பு நேரிய சார்பாகும்<br><br>2. இருபடிச் சார்பு ஒன்றுக்கொன்றான சார்பாகுமா?<br>**இல்லை.**<br>$f(x)=x^2-1$<br>இங்கு,<br>$-2$ மற்றும் $2$ ஆகியவற்றிற்கு ஒரே நிழல் உரு உள்ளது.<br><br><br>3. கனச்சார்பு ஒன்றுக்கொன்றான சார்பாகுமா?<br>**ஆம்.** கனச்சார்பு ஒன்றுக்கொன்றான சார்பாகும்.<br><br>4. தலைகீழ்ச் சார்பு இருபுறச்சார்பாகுமா?<br>**ஆம்.** தலைகீழ்ச் சார்பு இருபுறச்சார்பாகும்.<br><br>5. $f: A\to B$ ஆனது மாறிலிச் சார்பு எனில் $f$-யின் வீச்சகத்தில் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கை **ஒன்று** ஆகும். |

www.Padasalai.Net



**சிந்தனைக் களம்**

புத்தக பக்க எண்: 28

$f(x) = x^m$ மற்றும் $g(x) = x^n$ எனில் $f \circ g = g \circ f$ ?

$f \circ g = f(g(x)) = f(x^n) = (x^n)^m = x^{nm}$

$g \circ f = g(f(x)) = g(x^m) = (x^m)^n = x^{mn}$

இங்கு, $f \circ g = g \circ f$




## பயிற்சி 1.5

**1. கீழேக் கொடுக்கப்பட்டுள்ள $f$ மற்றும் $g$ எனும் சார்புகளைப் பயன்படுத்தி $f \circ g$ மற்றும் $g \circ f$ – ஐக் காண்க. $f \circ g = g \circ f$ என்பது சரியா சோதிக்க.**

**(i) $f(x) = x - 6,\ g(x) = x^2$**

$f \circ g = f \circ g(x)$

$= f(g(x))$

$= f(x^2)$

$= x^2 - 6$..............(1)

$g \circ f(x) = g(f(x))$

$= g(x - 6)$

$= (x - 6)^2$...............(2)

(1) மற்றும் (2) லிருந்து, $f \circ g \neq g \circ f$, **சமமில்லை**

**(ii) $f(x) = \frac{2}{x}$ , $g(x) = 2x^2 - 1$**

$f \circ g(x) = f(g(x))$

$= f(2x^2 - 1)$

$= \frac{2}{2x^2 - 1}$ ...............(1)

$g \circ f(x) = g(f(x)) = g\left(\frac{2}{x}\right)$

$= 2\left(\frac{2}{x}\right)^2 - 1 = \frac{8}{x^2} - 1$ .............(2)

(1) மற்றும் (2) லிருந்து, $f \circ g \neq g \circ f$, **சமமில்லை**

**(iii) $f(x) = \frac{x+6}{3}$ , $g(x) = 3 - x$**

$f \circ g(x) = f(g(x))$

$= f(3 - x)$

$= \frac{3 - x + 6}{3} = \frac{9 - x}{3}$ .................(1)

$g \circ f(x) = g(f(x))$

$= g\left(\frac{x+6}{3}\right)$

$= 3 - \left(\frac{x+6}{3}\right) = \frac{9 - x - 6}{3} = \frac{3 - x}{3}$ ........(2)

(1) மற்றும் (2) லிருந்து, $f \circ g \neq g \circ f$, **சமமில்லை**

**(iv) $f(x) = 3 + x, g(x) = x - 4$**

$f \circ g(x) = f(g(x))$

$= f(x - 4)$

$= 3 + x - 4$

$= x - 1$ ...............(1)

$g \circ f(x) = g(f(x))$

$= g(3 + x)$

$= 3 + x - 4$

$= x - 1$ ...................(2)

(1) மற்றும் (2) லிருந்து, $f \circ g = g \circ f$, **சமம்**

**(v) $f(x) = 4x^2 - 1, g(x) = 1 + x$**

$f \circ g(x) = f(g(x))$

$= f(1 + x) \quad = 4(1 + x)^2 - 1$

$= 4 + 8x + 4x^2 - 1$

$= 4x^2 + 8x + 3$ ..........(1)

$g \circ f(x) = g(f(x))$

$= g(4x^2 - 1)$

$= 1 + 4x^2 - 1 \quad = 4x^2$ ..........(2)

(1) மற்றும் (2) லிருந்து, $f \circ g \neq g \circ f$, **சமமில்லை**

**உங்கள் பயிற்சிக்காக....**

1. கீழே கொடுக்கப்பட்டுள்ள $f$ மற்றும் $g$ எனும் சார்புகளைப் பயன்படுத்தி $f \circ g$ மற்றும் $g \circ f$ -ஐக் காண்க. $f \circ g = g \circ f$ என்பது சரியா எனச் சோதிக்க.

   (i) $f(x) = 1 + x; g(x) = 2x - 1$

   (ii) $f(x) = 3x - 2\ ; g(x) = 2x - 1$

விடை: (i) $f \circ g \neq g \circ f$ (ii) $f \circ g = g \circ f$

**2. $f \circ g = g \circ f$ எனில் $k$ –யின் மதிப்பைக் காண்க.**

**(i) $f(x) = 3x + 2$, $g(x) = 6x - k$**

$f \circ g(x) = f(g(x))$

$= f(6x - k)$

$= 3(6x - k) + 2 = 18x - 3k + 2$

$g \circ f(x) = g(f(x))$

$= g(3x + 2)$

$= 6(3x + 2) - k = 18x + 12 - k$

கொடுக்கப்பட்டது: $f \circ g = g \circ f$

$18x - 3k + 2 = 18x + 12 - k$

$18x - 18x - 3k + k = 12 - 2$

$-2k = 10$

$\boldsymbol{k = -5}$

**(ii) $f(x) = 2x - k$, $g(x) = 4x + 5$**

